www.freetnbooks.com

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2025

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண் : | | | | | | |

## பொருளியல்

நேரம் : 3.00 மணி　　　　பகுதி - அ　　　　மதிப்பெண்கள் : 90

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.　　　　20 x 1 = 20

1. பேரியல் பொருளாதாரம் என்பது பற்றிய படிப்பு
   அ) தனிநபர்கள்　ஆ) நிறுவனங்கள்　இ) நாடு　ஈ) மொத்தங்கள்
2. பொதுவான விலையின் தொடர் உயர்வை குறிப்பிடும் கருத்து ______ ஆகும்.
   அ) மொத்த விலைக் குறியீடு　ஆ) வாணிபச் சூழல்　இ) பணவீக்கம்　ஈ) தேசிய வருவாய்
3. இந்தியாவில் நிதி ஆண்டு என்பது ______.
   அ) ஏப்ரல் 1 முதல் மார்ச் 31　ஆ) மார்ச் 1 முதல் ஏப்ரல் 30
   இ) மார்ச் 1 முதல் மார்ச் 16　ஈ) ஜனவரி 1 முதல் டிசம்பர் 31
4. PGLI என்பது ______ ன் குறியீடு ஆகும்.
   அ) பொருளாதார வளர்ச்சி　ஆ) பொருளாதார நலன்
   இ) பொருளாதார முன்னேற்றம்　ஈ) பொருளாதார மேம்பாடு
5. மறைமுக வேலையின்மையில், உழைப்பாளியின் இறுதிநிலை உற்பத்தி
   அ) பூஜ்யம்　ஆ) ஒன்று　இ) இரண்டு　ஈ) நேர்மறை
6. மொத்த அளிப்பு சமம் ______
   அ) C + I + G　ஆ) C + S + G + (X – m)　இ) C + S + T + (X – m)　ஈ) C + S + T + Rf
7. பெருக்கியின் மதிப்பு =
   அ) 1/(1–MPC)　ஆ) 1/ MPS　இ) 1/ MPC　ஈ) (அ) மற்றும் (ஆ)
8. கீன்சின் கருத்துப்படி, முதலீடு MEC யும் ______ சார்ந்தது.
   அ) தேவையையும்　ஆ) அளிப்பையும்　இ) வருவாயையும்　ஈ) வட்டி வீதத்தையும்
9. காகிதப்பண முறையை மேலாண்மை செய்வது
   அ) மைய பணவியல் அமைப்பு　ஆ) மாநில அரசு　இ) மைய அரசு　ஈ) வங்கிகள்
10. ______ பணவீக்கம் பொருளாதாரத்தினை எந்த வகையிலும் பாதிக்காது
    அ) நடக்கும்　ஆ) ஓடும்　இ) தவழும்　ஈ) தாவும்
11. வங்கியில்லா நிதி நிறுவனங்கள் ______ வைத்திருப்பதில்லை.
    அ) வங்கி உரிமம்　ஆ) அரசு ஏற்பு　இ) பணச்சந்தை ஏற்பு　ஈ) நிதி அமைச்சக அனுமதி
12. நபார்டு வங்கி எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது?
    அ) ஜூலை 1962　ஆ) ஜூலை 1972　இ) ஜூலை 1982　ஈ) ஜூலை 1992
13. பண மாற்று வீதம் நிர்ணயமாகும் சந்தை
    அ) பண சந்தை　ஆ) அயல் நாட்டு செலவாணி　இ) பங்கு சந்தை　ஈ) மூலதன சந்தை
14. ஆசியான் அமைப்பின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம்
    அ) ஜகார்த்தா　ஆ) புது டெல்லி　இ) கொழும்பு　ஈ) டோக்கியோ
15. சார்க் வேளாண் தகவல் மையம் துவங்கிய ஆண்டு
    அ) 1985　ஆ) 1988　இ) 1992　ஈ) 1998
16. பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான வரிச்சட்டம் எப்பொழுது நடைமுறைக்கு வந்தது?
    அ) 2017 மார்ச் 29　ஆ) 2017 ஜூலை 1　இ) 2017 ஜனவரி 1　ஈ) 2017 ஏப்ரல் 1
17. பொதுக் கடனைத் திரும்பச் செலுத்தும் முறை ______.
    அ) கடனை மாற்றுதல்　ஆ) மூழ்கும் நிதி　இ) பகுதியாகச் செலுத்துதல்　ஈ) இவை அனைத்தும்
18. மின்னணு கழிவுகள் ______ என்று பொதுவாக குறிப்பிடப்படுகின்றன.
    அ) திடக் கழிவுகள்　ஆ) குப்பைக் கழிவுகள்　இ) இ-கழிவுகள்　ஈ) மருத்துவமனைக் கழிவுகள்
19. இந்தியாவில் திட்டமிடுதலுக்கான அடித்தளத்தை அமைத்தவர் யார்?
    அ) ஜவகர்லால் நேரு　ஆ) எஸ். என் அகர்வால்
    இ) சர்.எம். விஸ்வேஸ்வரய்யா　ஈ) எம். என். இராய்
20. கேள்வித்தாள் மூலம் புள்ளி விவரம் திரட்டப்பட்டால் அது ______.
    அ) முதல் நிலை விவரம்　ஆ) இரண்டாம் நிலை விவரம்
    இ) வெளியிடப் பெற்ற விவரம்　ஈ) தொகுக்கப்பட்ட விவரம்

www.freetnbooks.com | FREETNBOOKS
Scanned with Cam

www.freetnbooks.com

பகுதி - ஆ

II. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 30 கட்டாய வினா) 7 x 2 = 14

21. பேரியல் பொருளியலின் இலக்கணம் தருக.
22. தனி மனித வருமானம் என்றால் என்ன?
23. நாட்டு வருமானம் கணக்கீட்டில் "சொந்த நுகர்வு" எவ்வாறு சிக்கலைத் தருகிறது?
24. "முழு வேலை வாய்ப்பு" - வரையறு.
25. இறுதி நிலை நுகர்வு நாட்டம் (MPC) - வரையறு.
26. பன்னாட்டு வாணிகத்தின் நன்மைகளில் ஏதேனும் இரண்டு குறிப்பிடுக.
27. "பொது நிதி" - வரையறு.
28. விதைப்பந்து என்பதன் பொருள் கூறுக.
29. பொருளாதார அளவையியல் என்றால் என்ன?
30. நிதி ஆயோக் பற்றி குறிப்பு வரைக.

பகுதி - இ

III. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 40 கட்டாய வினா) 7 x 3 = 21

31. பொருளாதார முறைகளின் வகைகளைக் குறிப்பிடுக.
32. நாட்டு வருமானத்தைக் கணக்கிடுதலின் பயன்களைப் பட்டியலிடுக.
33. J.B. சே விதியில் விளைவுகளைப் பற்றி குறிப்பு வரைக.
34. தன்னிச்சையான முதலீடு, தூண்டப்படுகிற முதலீடு ஆகியவற்றை வேறுபடுத்துக.
35. வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நோக்கங்களைக் குறிப்பிடுக.
36. அரசின் பணிகளைச் சுருக்கமாகக் கூறுக.
37. வரியின் ஏதேனும் மூன்று பண்புகளை எழுதுக.
38. பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயிக்கும் பொருளாதாரம் சாராத காரணிகள் யாவை?
39. குறிப்பு வரைக: அ) பருவநிலை மாற்றம் ஆ) அமில மழை
40. பண மதிப்பு நீக்கத்தின் நோக்கங்களைக் குறிப்பிடுக.

பகுதி - ஈ

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 x 5 = 35

41. அ) முதலாளித்துவம், சமதர்மம், கலப்புப் பொருளாதாரம் ஆகியவற்றின் தன்மைகளை ஒப்பிடுக.

(அல்லது)

ஆ) நாட்டு வருமானத்தைக் கணக்கிடும் முறைகளை விளக்குக.

42. அ) வேலையின்மையின் வகைகளை விவரி.

(அல்லது)

ஆ) மூலதனத்தின் இறுதி நிலை உற்பத்தித் திறனுக்கும் (MEC), முதலீட்டின் இறுதிநிலை உற்பத்தி திறனுக்கும் (MEI) உள்ள வேறுபாடுகள் யாவை?

43. அ) வணிகச் சுழற்சியின் பல்வேறு கட்டங்களை விவரிக்க.

(அல்லது)

ஆ) வணிக வங்கிகளின் பணிகளை விளக்குக.

44. அ) இர்விங் ஃபிஷரின் பண அளவுக் கோட்பாட்டினை விளக்குக.

(அல்லது)

ஆ) இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை விவரிக்க.

45. அ) உள் நாட்டு வாணிகத்துக்கும், பன்னாட்டு வாணிகத்துக்குமிடையிலான வேறுபாடுகளை விவாதிக்கவும். (அல்லது)

ஆ) உலக வங்கியின் பணிகளை வெளிக்கொணர்க.

46. அ) நீடித்த அல்லது வளம் குன்றா வளர்ச்சி முக்கியத்துவம் மற்றும் அதன் நோக்கங்களை விளக்குக. (அல்லது)

ஆ) பொது நிதியின் எல்லைகளை விளக்குக.

47. அ) பல்வேறு வகையான திட்டமிடல் வகைகளை விவரி. (அல்லது)

ஆ) பின்வரும் விவரங்களுக்கு திட்டவிலக்கத்தினைக் காண்க.
14, 22, 9, 15, 20, 17, 12, 11

*******

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with CamScanner